OS 203/2017
பி.வா.சா.1 ரமேஷ்குமார் த/பெ பச்சியப்ப முதலியார்
நாள் 28.10.2025

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. நான் எப்போதாவது தவறான ஆவணத்தில் கையொப்பம் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1ல் உள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் உள்ள புகைப்படம் என்னுடையது தான் அதில் உள்ள கையொப்பத்தை ரிஜிஸ்டர் ஆபிசில் போட்டேன். வா.சா.ஆ.1ல் உள்ள சாட்சிகளின் முதல் சாட்சி கே.சீனிவாசன், 2வது சாட்சி அரசு ஆவார். மேற்படி 2 சாட்சிகளும் ரிஜிஸ்டர் ஆபிசில் தான் கையெழுத்து செய்தார்கள். எனக்கு எழுத படிக்க தெரியும். வா.சா.ஆ.1 நான் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். எனது சம்மதத்தின் பேரில் தான் வா.சா.ஆ.1 ஆரணி சார் பதிவாளர் அலுவலத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் கண்ட சொத்து குறித்து 10.01.2007ல் கிரையம் பேசி முன்பணமாக ரூ.3 லட்சம் பெற்றுக்கொண்டு கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்தேன் என்றால் சரிதான். மீதி கிரையத்தொகை ரூ.10 லட்சம் கொடுத்து வாதி என்னை கிரையம் செய்து கொடுக்கும் படி கேட்டார் என்றால் இல்லை.

2. மீதி கிரையத்தொகையை கொடுத்து கிரையம் செய்து கொடுக்கும் படி வாதி கேட்டார் என்றாலும் நான் தான் கால தாமதம் செய்தேன் என்றால் இல்லை வட்டிக்காக வாங்கினேன். எனது தகப்பனார் எனக்கு எழுதி கொடுத்த பி.வா.சா.ஆ.2 தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் அசலை வாதி கேட்டதற்கு நான் மீதி தொகையை கொடுத்தால் தான் கொடுப்பேன் என்று சொன்னேன் என்றால் இல்லை. மேலும் ரூ.3,50,000/- தந்தால் தான் நான் கிரையம் எழுதி கொடுப்பேன் என்று கூறினேன் என்றால் இல்லை. வாதி நான் கேட்டது போல் ரூ.3,50,000/- கொடுத்தார் என்றால் இல்லை பணம் ஏதும் கொடுக்கவில்லை. வாதி தரப்பில் 18.02.2012 அன்று எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் கிரையம் முன்பணமாக ரூ.3 லட்சம் மற்றும் அடமானக் கடன் பத்திரம் மூலம் ரூ.3,50,000/-ம் ஆக ரூ.6,50,000/- வாங்கிவிட்டேன் என்றும் மீதி கிரையத்தொகையான ரூ.6 லட்சம் பெற்றுக்கொண்டு கிரையம் செய்து கொடுக்க வேண்டும் என்று விவரம் சொல்லப்பட்டிருந்தது என்றால் அவ்வாறு தான் விவரம் சொல்லப்பட்டிருந்தது அந்த விவரம் தவறு என்று எனது தரப்பில் பதில் அறிவிப்பு அனுப்பியிருக்கிறேன்.

3. வா.சா.ஆ.1 அடமான பத்திரத்தை ரத்து செய்ய நான் அறிவிப்பு ஏதேனும் அனுப்பினேனா என்றால் அடமான பத்திரம் எழுதப்பட்ட மறுநாளே அறிவிப்பு அனுப்ப எனது வழக்கறிஞரிடம் சொல்லிவிட்டேன் அறிவிப்பு அனுப்பியிருக்கிறேன். அடமானப்பத்திரம் மோசடியானது என்றோ அல்லது பணம் வாங்கவில்லை என்றும் எந்த காரணம் சொல்லி நான் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் பணம் பெறவில்லை என்றும் மோசடியானது என்றும் அனுப்பியிருக்கிறேன். எந்த தேதியில் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் தேதி நினைவில்லை. அந்த அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். அடமான பத்திரத்தை ரத்து செய்வதற்கு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. பணம் கொடுக்காமல் ஏமாற்றி அடமான பத்திரம் எழுதி வாங்கியதாக காவல் நிலையத்தில் புகார்

கொடுத்தேனா என்றால் இல்லை. ஆனால் ரிஜிஸ்டர் ஆபிசில் பணம் கொடுக்கவில்லை பத்திரத்தை ரத்து செய்யும் படி வாய்மொழியாக கூறினேன். ரிஜிஸ்டர் ஆபிசில் பத்திரம் ரத்து செய்ய சொன்னதாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சார் பதிவாளர் அலுவலகத்தில் எழுத்து மூலமான நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை.

(வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)